**CNR.NO:TNRM05-006198-2023**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2023-ம் ஆண்டு மே திங்கள் 03-ம் நாள் புதன்கிழமை**

**<u>பட்டிகை வழக்கு எண்.08/2023</u>**

தமிழக அரசுக்காக,
காவல் சார்பு ஆய்வாளர் அவர்கள்,
மண்டபம் காவல் நிலையம்,
குற்ற எண்.17/2022. ...........குற்ற முறையிடுனர்

/எதிராக/

A1.களஞ்சியம், (24/2022)
த/பெ.மகேந்திரன்.
அகதிகள் முகாம்,
மண்டபம்.

A2.முத்து (முத்துகுமார்), (35/2022)
த/பெ.ஆறுமுகம்.
அரசு குடியிருப்பு,
அகதிகள் முகாம்,
மண்டபம்.

A3.பிரபா, (25/2022)
த/பெ.அருள் நாயகம்.
இந்திரா நகர்,
மண்டபம்.

A4.பரமேஸ்வரி, (27/2022)
க/பெ.முத்துகுமார்.
அரசு குடியிருப்பு,
அகதிகள் முகாம்,
மண்டபம்.

A5.ஆனந்தி (மீனாட்சி), (39/2022)
க/பெ.சுதா,
அகதிகள் முகாம்,
மண்டபம். ..........குற்றம் சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கு 11.01.2023-ம் தேதியன்று குவிமுச பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 திருமதி.P.அமர்ஜோதி அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஹரிஹரன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1.**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

புகார்தாரர் மண்டபம் அகதிகள் முகாமில் குடியிருந்து வருவதாகவும், 22.01.2022 ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு புகார்தாரரின் கணவருடன் முகாமிற்கு உள்ளே உள்ள ரோட்டில் நடந்து செல்லும்போது, 1வது குற்றம் சாட்டப்பட்டவர் பின் பக்கமாக இருசக்கர வாகனத்தில் புகார்தாரரை இடிப்பது போல் வந்ததாகவும், அதனால் நிலைதடுமாறி கீழே விழும் சூழ்நிலையில் புகார்தாரரின் கணவர் பிடித்து விட்டதாகவும், இதுகுறித்து புகார்தாரரின் கணவர் 1வது குற்றம் சாட்டப்பட்டவரிடம் கேட்டதாகவும், அதற்கு 1வது குற்றம் சாட்டப்பட்டவர் கோபமடைந்து அசிங்கமாக பேசியதாகவும், புகார்தாரர் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு போடி தேவடியா வேலை பார்த்துட்டு போ என்று சொன்னதாகவும், பின்பு அன்று இரவு 07.00 மணிக்கு 1வது குற்றம் சாட்டப்பட்டவருடன் 2 முதல் 5 குற்றம் சாட்டப்பட்டவர்கள் புகார்தாரரின் வீட்டிற்குள் நுழைந்து வந்து அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் செய்ததாகவும், மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச-ன் படி குற்றம் செய்ததாக பிரிவு 173(2) குவிமுச-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு

ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச-ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுச படி 1, 2, 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act-ன் படியும், 4, 5 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச-ன் படியும் குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச-ன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர். அ.சா.2, அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள். கூடுதல் சாட்சி அ.சா.4 சார்பு ஆய்வாளர்.

5. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>**

அ.சா.1 தீபா தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளையும், 5 வது எதிரி ஆனந்தியையும் தெரியும். நான் எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 ஜார்ஜ் தனது சாட்சியத்தில், அ.சா.1 என் மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளையும், 5 வது எதிரி ஆனந்தியையும் தெரியும். நான் எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 சுப்பிரமணி தனது சாட்சியத்தில், அ.சா.1 என் மருமகள் ஆவார். ஆஜர் எதிரிகளையும், 5 வது எதிரி ஆனந்தியையும் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

கூடுதல் சாட்சியான அ.சா.4 வேலு தனது சாட்சியத்தில், கடந்த 23.01.2022-ம் தேதி 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.கோட்டைசாமி அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது தீபா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.17/2022, பிரிவுகள்.147, 294(b), 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளதாகவும், புகார் மனு அ.சா.ஆ.2. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. புகார் மனு, முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கபில்தாஸ் மற்றும் இமானுவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் பார்வை மகஜர் அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5. பின்பு சாட்சிகள் தீபா, ஜார்ஜ் புஸ், சுப்பிரமணி, மேரி மார்கிரேட், சூசை, அந்தோனியம்மாள், கபில்தாஸ் மற்றும் இமானுவேல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளதாகவும், அதன்பின்பு கடந்த 23.01.2022-ம் தேதி 15.10 மணிக்கு எதிரிகள் முத்துகுமார் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரை மண்டபம் கேம்ப் அவர்களது வீட்டில் வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்துள்ளதாகவும், வழக்கின் எதிரி களஞ்சியம், பிரபா, ஆனந்தி, ஆகியோர்களை அன்றைய தினம் 15.00 மணிக்கு மண்டபம் கேம்ப் பஸ் ஸ்டாப்பில் வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்துள்ளதாகவும், இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது கடந்த 04.01.2023-ம் தேதி சட்டப்பிரிவுகள். 147, 294(b), 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act-ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக உள்ளவை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். தங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லை என முடிக்கப்பட்டது.

**7. இந்நிலையில், 1, 2, 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act-ன் படியும், 4, 5 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச-ன் படியும் அரசுத் தரப்பால் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிகளின் வாயிலாக நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 தனது வாதத்தில், புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாக இருந்தாலும், கூடுதல் சாட்சியான அ.சா.4 மண்டபம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

9. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தில் நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாக உள்ள நிலையில், கூடுதல் சாட்சியான அ.சா.4 மண்டபம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்று முடிவு செய்ய முடியாது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

10. புகார்தாரான அ.சா.1 வழக்கு சம்பவம் குறித்து தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

**"ஆஜர் எதிரிகளையும், 5வது எதிரி ஆனந்தியையும் தெரியும். நான் எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்."** என அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு மேற்படி சாட்சியமளித்துள்ளார். புகார் மனுவில் சொல்லப்பட்ட வழக்கு சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக உள்ளார்.

11. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 வழக்கு சம்பவம் குறித்து தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

**"அ.சா.1 என் மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளையும், 5வது எதிரி ஆனந்தியையும் தெரியும். நான் எதிரிகளோடு சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்"** என அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு மேற்படி சாட்சியமளித்துள்ளார்.

மேலும், சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், **"அ.சா.1 என் மருமகள் ஆவார். ஆஜர் எதிரிகளையும், 5வது எதிரி ஆனந்தியையும் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்"** என சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனுவில் சொல்லப்பட்ட வழக்கு சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக உள்ளார்கள்.

எனவே, அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக உள்ள நிலையில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மேற்படி அளித்த சாட்சியத்திலிருந்து, புகார்தாரரை 1வது குற்றம் சாட்டப்பட்டவர் வாகனத்தை கொண்டு இடிக்க வந்ததாகவோ, குற்றம் சாட்டப்பட்டவர்கள் புகார்தாரரை அசிங்கமாக பேசி, கட்டையால் தலை மற்றும் கை, கால்களில் அடித்ததாகவோ, கொலை மிரட்டல்

விடுத்ததாகவோ அனுமானிக்க முடியவில்லை. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சிகள் அமையவில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

12. எனவே, இந்த வழக்கில் புகார்தாரர், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் பிறழ் சாட்சியாக இருப்பதால், அரசு தரப்பில் மற்ற சாட்சிகள் எல்லாம் விலக்கிக் கொள்ளப்பட்டு கூடுதல் சாட்சியாக அ.சா.4 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அளித்த சாட்சியமானது ஆவணங்கள் அடிப்படையில் அமைந்ததாகும். அ.சா.4 ன் மூலம் முன்னிறுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 7 ன் கீழ் சம்பவ இடத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும், மேற்படி ஆவணங்களில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை செய்து ஏற்படுத்தப்பட்டது என்று அ.சா.4 க்கு நேரடியாக தெரியாது. அதேபோல், புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சியிடம் விசாரணை செய்து மனு பெற்றது பற்றியும், அ.சா.4 க்கு நேரடியாக தெரியாது. மேலும், அரசு தரப்பு சாட்சிகள் புகார்தாரரை 1 வது குற்றம் சாட்டப்பட்டவர் வாகனத்தை கொண்டு இடிக்க வந்ததாகவோ, குற்றம் சாட்டப்பட்டவர்கள் புகார்தாரரை அசிங்கமாக பேசி, கட்டையால் தலை மற்றும் கை, கால்களில் அடித்ததாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.4 ஆவணத்தின் அடிப்படையில் அளித்த சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கில் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்று நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

எனவே, அரசு தரப்பு சாட்சிகள் குற்றச்சாட்டின் குற்ற உட்கூறுகளுக்கு உட்பட்டு சாட்சியம் அளிக்காததாலும், புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாக இருப்பதாலும், கூடுதல் சாட்சியான அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக தீர்மானம்

செய்ய முடியாது என்பதால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. எனவே, அரசு தரப்பில் தகுந்த, நம்பும்படியான, கோர்வையான சாட்சியத்தை முன்னிட்டு 1, 2, 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act-ன் படியும், 4, 5 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச-ன் படியும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. முடிவாக,

இவ்வழக்கில் 1, 2, 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act-ன் படியும், 4, 5 குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிரிவுகள் 147, 294(b), 506(ii) இதச-ன் படியும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

15. வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

16. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் 23.01.2022ம் தேதி கைது செய்யப்பட்டு, அன்றையதினமே நிலையபிணையில் சென்றுள்ளார்கள்.

17. அ.சா.1 தனக்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததால் இந்த நீதிமன்றம் பிரிவு 357A(2) குவிமுச படி மாவட்ட சட்டப்பணிகள் குழு மூலம் இழப்பீடு பெறுவதற்கு பரிந்துரை செய்ய வில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு மே திங்கள் 03ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S ILAYA RAJA
Digitally signed by S ILAYA RAJA
Date: 2023.05.03 14:32:15 +1130

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | - | தீபா |
| அ.சா.2 | - | ஜார்ஜ் |
| அ.சா.3 | - | சுப்பிரமணி |
| அ.சா.4 | - | வேலு, சிறப்பு சார்பு ஆய்வாளர் |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | - | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | - | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | - | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | - | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | - | மாதிரி வரைபடம் |

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

இல்லை

**சான்றுப்பொருள்:**

இல்லை

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.

2. குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் இருந்தனர்.

3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

S ILAYA RAJA

Digitally signed by S ILAYA RAJA
Date: 2023.05.03 14:32:22 +1130

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

## Case Summary Instructions

**CC. No.08/2023**
**Cr.No.17/2022**
**Name of the Police Station: Mandapam PS**
**U/s.147, 294(b), 506(ii) IPC 4 of TNPHW Act**

| | | |
|---|---|---|
| 1. Accused Remand Date | : | Station bail |
| 2. Complaint Date | : | 23.01.2022 |
| 3. Final Report filed in the Court | : | 04.01.2023 |
| 4. First Questioning date | : | 16.03.2023 |
| 5. PW1 Chief & Cross | : | 18.04.2023 |
| PW2 Chief & Cross | : | 18.04.2023 |
| PW3 Chief & Cross | : | 18.04.2023 |
| PW4 Chief & Cross | : | 25.04.2023 |
| 6. 313(1)(b) Questioning Date | : | 03.05.2023. |

S ILAYA RAJA
Digitally signed by S ILAYA RAJA
Date: 2023.05.03 14:32:28 +1130

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.